மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.02.2025) சென்னை, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழக அலுவலகத்தில் மகாராஷ்டிரா மாநில சுகாதாரத்துறை அமைச்சர் பிரகாஷ்ஜி அபித்கர், சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி.மேகனா போர்டிகர் மற்றும் குழுவினர் சந்தித்து தமிழ்நாடு மருத்துவத்துறை கட்டமைப்பு பற்றி கேட்டறிந்தனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் மரு.உமாநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் நேற்று (21.02.2025) பாண்டிபஜாரில் முதல்வர் மருந்தக திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உணவு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத் துறை செயலாளர் சத்ய பிரதா சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூடுதல் பதிவாளர் (நுகர்வு பணிகள்) அம்ரித் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை – கொட்டிவாக்கம் – ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் – பிப்.28 அன்று

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - முதல்வர் பிறந்தநாள் விழா பிரம்மாண்டப் பொதுக்கூட்டம்!

முதல்வர் ஏற்புரை! தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்துரை!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, பிப்.22-

தமிழ்நாட்டின் முதல மைச்சர் 72வது பிறந்தநாள் விழா மிகப்பிரம்மாண்ட பொதுக்கூட்டம் வரும் பிப்.28 அன்று கொட்டிவாக் கம் ஒய்.எம்.சி.ஏ. மைதா னத்தில் முதலமைச்சர் அவர் களின் ஏற்புரையுடன், தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்துரையு டன் நடைபெறுகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச் சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரி வித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்தநாள் மார்ச் 1 அன்று நடைபெறுவதை முன்னிட்டு நேற்று (21.2. 2025) காலை 8 மணியள வில் எஸ்.ஆர்.பி. டூல்ஸ் அருகே உள்ள கொட்டி வாக்கம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ராட்ச பலூன் ஒன்றை பறக்கவிட்டார்.

அப்போது அவர் செய்தி யாளர்களிடம் தெரிவித்த தாவது:-

முதலமைச்சர் அவர்க ளின் பிறந்தநாள் விழா சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மிகவும் பிரம்மாண்டமாகவும், கோலாகலமாகவும் மார்ச் 31 வரை கொண்டாடப்பட இருக்கிறது. அதில் மிக முக் கியத்துவம் வாய்ந்த நிகழ்ச் சியாக தமிழ்நாட்டின் முத லமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு பேசுகிற வாழ்த்து களை பெறுகிற மிக பிரம் மாண்டமான மாநாட்டுக்கு நிகரான நிகழ்ச்சி வருகிற பிப்ரவரி 28-ஆம் தேதி மாலை நடைபெற இருக்கி றது.

அந்த சிறப்புமிகுந்த நிகழ்ச்சியில் தி.மு.கழகத் தின் தோழமை இயக்கங் கள் சற்றேரக்குறைய 20க்கும் மேற்பட்ட கட்சிக ளின் தலைவர்கள் பங் கேற்று வாழ்த்தி உரையாற்ற இருக்கின்றனர். இந்த பிரம் மாண்ட மாநாட்டுத் திட லைப் பொறுத்த அளவில் 3 லட்சம் சதுர அடி பரப்பி லான மைதானத்தை சீர்ப டுத்தும் பணி கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வருகிறது. மேடை அமைக் கிற பணி இன்று சிறப்பாக தொடங்குகிறது. அதற்கு முத்தாய்ப்பாக ராட்சத பலூன் ஒன்று விண்ணில் பறக்கவிடப்பட இருக்கி றது. தளபதி 72; தலைவர் 72 என்ற வாசகங்களுடன் தள பதி அவர்களின் படத்து டன் ராட்ச பலூன் பறக்கவி டப்பட்டு, மேடை அமைக்கிற பணி தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

இந்த கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத் தில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கிறார் கள். கலந்துகொண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் பிரம்மாண்ட விழாக்களாக வெற்றிபெற்றிருக்கிறது. சென்னை தெற்கு மாவட் டம் உதயமானபோது பொது உறுப்பினர்கள் கூட் டம் இந்த ஒய்.எம்.சி.ஏ., திடலில்தான் நடைபெற் றது. இருபத்தோராயிரம் பேர் கலந்துகொண்ட அந்த சிறப்பானக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் முதலமைச் சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி யாற்றினார்கள்.

பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடம்!

தொடர்ந்து முரசொலி நாளேட்டின் பவள விழா விற்கு ஒரு பிரம்மாண்ட அரங்கு, பிரம்மாண்ட பந் தல் அமைக்கப்பட்டு, அந்த அரங்கில்தான் 2017ஆம் ஆண்டு திராவிட முன்னேற் றக் கழகத்தின் தலைமையி லான தோழமைக் கட்சிக ளின் தலைவர்கள் பங் கேற்று வாழ்த்துரை வழங்கு கிற முரசொலி பவள விழா நடைபெற்றது.

அதேபோல் 2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர் தல் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் இதே ஒய்.எம். சி.ஏ., மைதானத்தில்தான் 6,125 பேர் உதயசூரியன் வடிவில் நின்று உலக சாத னைப் படைக்கப்பட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றது. தமிழ்நாட்டின் முதலமைச் சர் அவர்கள் கடந்த சட்ட மன்ற பொதுத்தேர்தலுக்கு முன்னால் 'உங்கள் தொகுதி யில் ஸ்டாலின்' என்ற பிரம் மாண்ட விழாவையும் நடத்தி, இறுதி நிகழ்ச்சி சென்னையில் இந்த ஒய். எம்.சி.ஏ. மைதானத்தில் தான் நடத்தப்பட்டது. ஒருங்கிணைந்த சென்னை தி.மு.கழகத்தின் சார்பில் மிக பிரம்மாண்டமாக அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியிலும் தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று சிறப்பு ரையாற்றினார்கள்.

3 ஆயிரம் பேர் பல்வேறு அரசியல் கட்சிகளிலிருந்து விலகி தி.மு. கழகத்தில் இணையும் நிகழ்ச்சியும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் முன்னி லையில் இந்த கொட்டிவாக் கம் ஒய்.எம்.சி.ஏ., மைதா னத்தில்தான் நடைபெற்றது. இப்படி பல்வேறு நிகழ்ச்சி கள் இந்த மைதானத்தில் நடைபெற்றது. அந்த எல்லா நிகழ்ச்சிகளும் மிகப் பெரிய அளவிற்கு வெற்றியைப் பெற்றிருக்கிறது.

மாநாட்டுக்கு நிகராக பொதுக்கூட்டம்!

வருகிற பிப்ரவரி 28-ஆம் தேதி 'தமிழ்நாட்டின் முதல மைச்சர் அவர்களின் 72-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மாநாட்டுக்கு நிகராக இங்கே நடைபெற இருக்கி றது. தி.மு.கழகத்தின் தோழமை இயக்கங்களின் தலைவர்கள் 20க்கும் மேற் பட்டோர் பங்கேற்று சிறப் புரையாற்ற இருக்கிறார் கள். 2400 சதுர அடி பரப்பளவில் மிகப் பிரம் மாண்டமான எல்.இ.டி., மேடை, நுழைவாயில் 200 அடி பரப்பளவில் எல்.இ.டி., சுவர் அமைக்கப்படவிருக்கி றது. இந்த மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இராஜீவ்காந்தி சாலையில் செல்பவர்கள் பார்க்கிற வகையில் 200 அடி நீள எல்.இ.டி., சுவர் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

பொதுக்கூட்டம், மாநா டுகள் என்றால் பொதுவாக சீரியல் லைட்டுகளில்தான் தலைவர்களின் உருவங்கள் அமைக்கப்பட இருக்கிறது. ஆனால் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் கடந்த இரண்டாண்டுக ளாக நடைபெறும் நிகழ்ச்சி கள் எல்.இ.டி., Standing picture தலைவர்களின் படங் கள் வைக்கப்படுகிறது. அந்த வகையில் இந்தக் கூட் டத்தில் 32 இடங்களில் 32 அடி உயரத்திற்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், வணக்கத்திற் குரிய தமிழ்நாட்டின் முதல மைச்சர், இளைஞர் அணிச் செயலாளர் ஆகியோரு டைய படங்கள் எல்.இ.டி., மிகப்பெரிய அளவில் அமைக்கப்படுவது இந்த நிகழ்ச்சியின் சிறப்பு.

அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடிகள் அமைப்பதும் சிறப்புவாய்ந்தது. இந்த மாநாட்டுத் திடலில் 50 அடி உயரத்திற்கு, கொடிக்கம் பங்கள் 50 எண்ணிக்கையில் நிறுவப்பட இருக்கிறது. 10க்கு 15 என்கிற அளவில் தோழமைக் கட்சிகளின் கொடிகள் இந்த திடலில் அமைக்கப்பட இருக்கிறது. மாநாட்டுத் திடலுக்கு வெளியில் ராஜீவ்காந்தி சாலையில் மத்திய கைலாஷ் சிலிருந்து கொட்டிவாக்கம் வரை இருபுறமும் 500 எண் ணிக்கையில் 30 அடி உயர கொடிக்கம்பங்கள் நிறுவப் பட இருக்கிறது. 500 கொடிக்கம்பங்களும் 15க்கு 16 என்கிற அளவில் தி.மு. கழக கொடிகள் அமைக்கப் பட இருக்கிறது.

75 அடி உயர கொடிக்கம்பம்!

அதோடுமட்டுமல்ல மேடைக்கு எதிரே தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்களின் 72வயதைக் குறிக்கிற வகையில் 72 அடி உயரக் கொடிக்கம்பம் ஒன் றும் பறக்கவிடப்பட இருக் கிறது. இந்த மைதானத் திற்கு வருவதற்கு 3 நுழைவுவாயில்கள் இருக்கி றது. அவற்றை அழகான தோரண முகப்புகளாக அமைக்கப்பட இருக்கிறது. மைதானத்தில் 1 லட்சம் பேர் பங்கேற்கிற வகையில் வசதிகள் செய்யப்பட இருக் கிறது. 15 இடங்களில் சுத்தி கரிக்கப்பட்ட 15 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி கள் அமைக்கப்பட இருக்கி றது. 10 இடங்களில் தற்கா லிக கழிவறைகள் அமைக்கப்பட இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாது இந்நிகழ்ச்சிக்கு எளிதாக வந்துசெல்கிற வகையில் வாகனங்களை நிறுத்தக் கூடிய வாகன நிறுத்து மிடங்கள் அமைக்கப்பட இருக்கிறது. மேடைக்கு பின்னால் சிறப்பு விருந்தி னர்கள், அமைச்சர் பெருமக் கள் வரும் வாகனங்களை நி று த் து வ த ற் கு ம் , மேடைக்கு இடது புறம் சட் டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள் ஆகியோரின் வாகனங் கள் நிறுத்துவதற்கும், மாநாட்டில் பங்கேற்போர் காவல்துறையினரின் உதவி யுடன் பல்வேறு இடங்க ளில் வாகனங்களை நிறுத்து வதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

நெருக்கடி இல்லாமல், பொதுமக்களுக்கு பாதிப்பு கள் ஏற்படுத்தாத வண் ணம், அந்த மாநாட்டுக்கு நிகரான பிறந்தநாள் பொதுக்கூட்டம் வரும் பிப் ரவரி 28ஆம் தேதி மாலை மிகச்சிறப்பாக சென்னை தெற்கின் சார்பில் நடைபெ றுவதற்கு முன்னோட்ட மாக இப்போது இந்த ராட் சத பலூன் ஒன்று பறக்கவி டப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தி யாளர்களிடம் தெரிவித் தார்.

நாளை நடைபெறுகிறது!

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப். 22-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ரா தா கி ரு ஷ் ண ன் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயற்கு ழுக் கூட்டம் நாளை(23.02.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4 மணிக்கு, மாவட்டக் கழக அலுவல கத்தில் அவைத் தலைவர் எஸ்.அருணாச்சலம் தலை மையில் நடைபெறவுள் ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் - திராவிட மாடல் ஆட்சி யின் நாயகர் தளபதியார் அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோ சிக்க நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர் கள், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ் ணன் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில்

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

காரமடையில் 3000 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. வழங்கினார்! தொண்டாமுத்தூர் அ.ரவி பங்கேற்பு!

கோவை, பிப். 22 -

தமிழ்நாடு முதல்வர், கழ கத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன் னிட்டு கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பா ளையம் சட்டமன்ற தொகு திக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பால் உற்பத்தியா ளர்களுக்கு 3000 பால் பக் கெட்டுகள், 3000 தென்னங் கன்றுகள், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு உபக ரணங்கள், கட்டிட தொழி லாளர்களுக் கான உபகர ணங்கள்,

முடி திருத்தும் தொழிலா ளர்களுக்கான உபகரணங் கள், எல்.பி.எஃப். ஆட்டோ தொழிற்சங்க ஓட்டுநர்களுக் கான சீருடை, மலைவாழ் மக்கள் மற்றும் அருந்தி யின மக்களுக்கு மளிகை பொருட்கள், அரிசி மற்றும் கணவனால் கைவிடப் பட்ட பெண்களுக்கு இல வச தையல் இயந்திரங்கள் உள்ளிட்ட 3000 க்கும் மேற் பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் தலைமைச் செயற் குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம் ஏற்பாட் டில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா கலந்து கொண்டு கார மடை அருகே உள்ள திம் மம் பாளையம்புதூர் சிவாஸ் மஹாலில் வழங்கி னார்.

உடன் மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத் தூர் அ.ரவி, முன்னாள் எம். எல்.ஏ.க்கள் சி.ஆர்.ராமச்சந் திரன், பா.அரு ண்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்திரன், அஷ்ரப் அலி, ஒன்றிய செய லாளர்கள் சுரேந்திரன், எஸ்.எம்.டி.கல் யாணசுந்தரம், பழனிச் சாமி, தனபால், சாமி பையன், சுரேஷ், நகர செய லாளர்கள் வெங்கடேஷ், முகமது யூனூஸ், முனுசாமி, அறிவரசு, பேரூர் கழக செய லாளர்கள் உதயகுமார், சுரேஷ், பரமேஸ்வரன், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ராமுகுட்டி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சந்திரசேகர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு நடிகர் பிரகாஷ்ராஜ் கடும் கண்டனம்!

சென்னை, பிப். 22-

நடிகர் பிரகாஷ் ராஜ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், உங்க ளுக்கு இந்தி தெரியும்.. நீங்க இந்தியில் பேசுறீங்க.. எங்களையும் இந்தியில் பேச சொல்லி கட்டாய படுத்துகிறீங்க என்று விமர் சித்துள்ளார். ஏன்னா உங்க ளுக்கு இந்தி மட்டும் தான் தெரியும்.. இந்த அபத்த மான விளையாட்டு எங்க ளிடம் செல்லாது என, சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரையில் – சிறுகதை மன்னர்

எஸ்.எஸ்.தென்னரசு 97வது பிறந்த நாள்!

திருவுருவப் படத்திற்கு – என்.எம்.மாரி தலைமையில் மாலை அணிவிப்பு!

மதுரை, பிப். 22 -

அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில் "சிறுகதை மன்னர்" எஸ். எஸ்.தென்னரசு அவர்க ளின் 97 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு, 20.02.2025 காலை 10 மணி அளவில் மதுரை வடக்கு மாசி வீதி மணியம்மை மழ லையர் பள்ளியில் மன்றத் தலைவர் என்.எம்.மாரி தலைமையில் "சிறுகதை மன்னர்" எஸ்.எஸ்.தென்ன ரசு அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணி விக்கப்பட்டது.

நிகழ்வில் இலக்கிய மன் றப் புரவலர் அரிமா மகா. கணேசன், செயலாளர் கே.வி.இராமகிருட்டினன், துணைச் செயலாளர்கள் கரு.ஆறுமுகம், லெ.முரு கேசன், துணைத் தலைவர் கள் டி.வி. அழகர், ச. செல் வக்குமரன், செயற்குழு உறுப்பினர்கள் லெ. வெள் ளைச்சாமி, ரெ. கார்த்திகே யன், சீ. வரதராசன்,

சிறப்பு அழைப்பாளர் கள் புரட்சிப் பாவலர் மன் றத் தலைவர் " பெரியார் நெறியாளர் " பி. வரதரா சன், திராவிட இயக்கத் தமி ழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் இராம.வைரமுத்து, சிறு பான்மையினர் நல உரி மைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் க.அ. உஸ் மான் அலி, மாமன்ற மேனாள் உறுப்பினர் கா.ரா.முருகேசன். வி.கண் ணன், திருமதி ரஜினி அமுது ஆகியோர் பங்கேற் றுச் சிறப்பித்தனர்.

இந்திய அளவில்

சுற்றுலாத் துறையில் சிறந்து விளங்கும் முதன்மை மாநிலம் தமிழ்நாடு!

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பெருமிதம்!

சேலம், பிப். 22-

கூட்டரங்கில், நேற்று முன்தினம் (20.02.2025) சென்னை சுற்றுலா வளாக சுற்றுலாத்துறை யின் பணி கள் குறித்த ஆய்வுக் கூட் டம் சுற்றுலா பண்பாடு மற் றும் அறநிலயங்கள் துறை அரசு கூடுதல் செயலாளர் டாக்டர்.கா. மணிவாசன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்கு நர் திருமதி. ஷில்பா பிரபா கர் சதீஷ் முன்னிலை யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த மாவட்ட சுற் றுலா அலுவலர்களிடம் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோ சிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறை பொழு துபோக்கு சுற்றுலா, பாரம் பரிய சுற்றுலா, ஆன்மீக சுற் றுலா, பண்பாட்டு சுற்றுலா, மருத்துவச் சுற் றுலா என பல்வேறு வகை யான சுற்றுலாகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அனைத்து விதமான சுற்று லாகளிலும் தமிழ்நாட்டில் சிறப்பான வாய்ப்புகள் உள்ளது.

தமிழ்நாட்டின் மருத் துவ கட்டமைப்பு குறைந்த செலவில் அதி நவீன, தரமான, சிறப்பான மருத்துவத்தை அளித்து வருவதால் மருத்துவச் சுற் றுலாவில் இந்தியாவில் முத லாவது மாநிலமாக திகழ் கின்றது.

ஒவ்வொரு மாவட்டத் திலும் உள்ள சுற்றுலாத்

தலங்களில் ஏற்படுத்தப்பட் டுள்ள அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலா தலங்களை கண்டறிந்து அவ்விடங்க ளில் உலக தரத்திலான அடிப்படை உள் கட்ட மைப்பு வசதிகளை ஏற்ப டுத்த ஆலோசிக்கப்பட் டது.

தற்போது சுற்றுலா பய ணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனு பவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப்பகு திகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள் ளிட்ட புதிய அனுபங் களை மேற்கொள்ள விரும் புகின்றார்கள். இவை தற்போது வளர்ச்சிய டைந்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உள்ள தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்களில் உணவின் தரத்தை மேலும் மேம்ப டுத்தும் வகையில் சமையல் கலையில் நிபுணரான டாக் டர் பட்டம் பெற்ற தாமோதரன் (Dr. CHEF DHA MU) அவர்களின் அறிவுரை களின் படி தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் உள்ள அனைத்து சமையல் கலை ஞர்களுக்கு காணொளி காட்சி வாயிலாக சமையல் கலையில் சிறப்பம்சங்களை எடுத்துறைத்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்பான வகையில் உணவு வழங்குதல், பரிமா றுதல் மற்றும் சுகாதார மேம்படுத்தல், போன்ற அறிவுரைகளை வழங்கி னார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற் றும் மாவட்ட வருவாய் அலுவலர்திருமதி.ச.கவிதா, சுற்றுலா ஆணையரக உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அதிகாரிகள் அனைத்து மாவட்ட சுற் றுலா அலுவலர்கள் மற்றும் சுற்றுலாத்துறை பணியா ளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்ணா அறிவாலய ஊழியர்

கி.பிரபாகரனின் மாமனார் அ.பொ.சந்திரன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, பிப். 22-

அண்ணா அறிவாலய ஊழியர் கி.பிரபாகரன் அவர்களின் மாமனார் அ.பொ.சந்திரன் (வயது 75) சில நாட்களாய் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை மேற் கொண்டிருந்த நிலையில், சிகிச்சை பலனிக்காமல் நேற்று (21.02.2025) காலை 11.00 மணியளவில் மறை வெய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம். அவருக்கு இரண்டு மகள் கள் உள்ளனர்.

அன்னாரது உடல், சென்னை 18, தேனாம் பேட்டை, திருவள்ளுவர் சாலை, பாரதியார் தெரு வில் உள்ள அவரது இல்லத் தில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டுள்ளது. அவரது இறுதி ஊர்வலம் இன்று (22.02.2025) மதியம் 2 மணியளவில் அவரது இல் லத்திலிருந்து புறப்பட்டு மயிலாப்பூர் டி.ஜி.பி. ஆபிஸ் பின்புறத்தில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.